அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 4

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: சனிக்கிழமை** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 10 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1. பொருத்தமான விடையின் முன் புள்ளடியிடுக.

1. திருடர்களால் கவர முடியாத செல்வம்
   - ☐ பணம்
   - ☐ உணவு
   - ☐ கல்வி

2. கரும்பு, வாழைப்பழம் என்பவற்றின் சுவை
   - ☐ இனிப்பு
   - ☐ புளிப்பு
   - ☐ உறைப்பு

3. நாய் குரைக்கும். அது போல நரி
   - ☐ கதறும்
   - ☐ ஊளையிடும்
   - ☐ உறுமும்

4. முற்காலத்தில் செய்திகளை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட பறவை
   - ☐ காகம்
   - ☐ கிளி
   - ☐ புறா

5. காலைப்பொழுது என்பதைப் பிரித்து எழுதினால்
   - ☐ காலை + பொழுது
   - ☐ காலைப் + பொழுது
   - ☐ கால் + பொழுது

6. மாணவர்கள் சறுக்கி
   - ☐ விளையாடினோம்
   - ☐ விளையாடினார்கள்
   - ☐ விளையாடினீர்கள்

7. ஆண்டின் இறுதி மாதம்
   - ☐ பங்குனி
   - ☐ ஆடி
   - ☐ மார்கழி

8. 700 என்பதன் எழுத்து வடிவம்
   - ☐ எலுநூறு
   - ☐ எழுநூறு
   - ☐ எளுனூறு

9. நீ படிக்கின்றாய். நான்
   - ☐ படிக்கின்றார்கள்
   - ☐ படிக்கின்றோம்
   - ☐ படிக்கின்றேன்

10. பால் + ஆடை என்பதைச் சேர்த்து எழுதினால்
    - ☐ பால்லாடை
    - ☐ பாலாடை
    - ☐ பால்ஆடை

11. மெய்யெழுத்துகள்
    - ☐ 12
    - ☐ 7
    - ☐ 18

12. தந்தைக்குத் தாய். அதுபோல அரசனுக்கு
    - ☐ தோழி
    - ☐ அரசி
    - ☐ பாட்டி

13. உங்கள் பெயர்
    - ☐ யார்?
    - ☐ எவை?
    - ☐ என்ன?

14. பொதுமறை என்று அழைக்கப்படும் நூல்
    - ☐ சிலப்பதிகாரம்
    - ☐ நாலடியார்
    - ☐ திருக்குறள்

15. பூ என்பதன் பன்மை வடிவம்
    - ☐ பூகள்
    - ☐ பூக்கள்
    - ☐ பூங்கள்

16. உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்று

☐ ஆங்கிலம் ☐ மலையாளம் ☐ தமிழ்

17. பெண்பாற் சொல்

☐ மாணவி ☐ அறிஞன் ☐ மாணவர்

18. ஆடி முதல் நாள் கொண்டாடப்படுவது

☐ ஆடி அமாவாசை ☐ ஆடிப்பிறப்பு ☐ ஆடிப்பூரம்

19. 'எண்ணும் எழுத்தும் இரு கண்களைப் போன்றவை' என்றார்

☐ திருவள்ளுவர் ☐ பாரதியார் ☐ கம்பர்

20. ய், ர், ல், வ், ழ், ள் என்ற எழுத்துகள்

☐ வல்லினம் ☐ மெல்லினம் ☐ இடையினம்

(20 X 1 = 20 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.**

1. நாம் ____________________________ பேசுவோம்.

   (தமிழால், தமிழில்)

2. ஆசிரியர் ________________________________ப் பாராட்டினார்.

   (மாணவரை, மாணவருக்கு)

3. அந்த மேசையில் பல பரிசுகள் உள்ளன. ______________________ ஒன்றை எடு.

   (இவற்றுள், அவற்றுள்)

4. ஓவியா விளையாடிக் கொண்டிருந்தாள். ________________________ மழை பெய்தது.

   (அப்பொழுது, இப்பொழுது)

5. நான் கேட்ட பாடல்கள் ___________________________ இனிமையானவை.

   (அவற்றுள், ஒவ்வொன்றும்)

(5X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. தொலைபேசி ______________________________
2. விலங்குகள் ______________________________
3. விடுமுறை ______________________________
4. மகிழ்ச்சி ______________________________
5. ஆடல் ______________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| கமகம | மெல்ல மெல்ல | துள்ளித்துள்ளி |
| பாடிப்பாடி | கிடுகிடு | மடமட |

1. முதியவர் குளிரினால் ______________________________ என நடுங்கினார்.
2. நிலா தாகத்தினால் ______________________________ என்று தண்ணீரைக் குடித்தாள்.
3. ஆமை ______________________________ நடந்து வந்தது.
4. கன்றுக்குட்டி ______________________________ ஓடியது.
5. மாணவர்கள் ______________________________ ஆடினார்கள்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. காய்ச்சுவார்கள் / ஆடிக்கூழ் / ஆடிப்பிறப்பன்று / தமிழர்

_______________________________________________

2. சாயம் / நீலநரியின் / போனது / வெளுத்துப்

_______________________________________________

3. படிப்பித்தார் / பற்றிப் / திருக்குறளைப் / ஆசிரியர்

_______________________________________________

4. கட்டி / அணைத்தார் / தாய் / குழந்தையைக்

_______________________________________________

5. எழுத்தும் / போன்றவை / கண்களைப் / எண்ணும்

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முத்தமிழை உள்ளடக்கிய இலக்கியம் எது?

_______________________________________________

2. காட்டு விலங்குகள் இரண்டின் பெயர்களை எழுதுக.

_______________________________________________

3. பெயர்ச்சொற்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

4. ஆடிப்பிறப்புக் கொண்டாடப்படும் நாள் எது?

_______________________________________________

5. தொடர்பாடற் கருவிகள் இரண்டு எழுதுக.

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. **படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**





1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

(5 X 3 = 15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஒரு காட்டில் புறாக்கள் உணவைத் தேடி அலைந்து திரிந்தன. நீண்ட நேரம் தேடியும் அவற்றுக்கு உணவு கிடைக்கவில்லை. புறாக்கள் ஓரிடத்தில் அரிசி பரவிக் கிடப்பதைக் கண்டன. உடனே அவற்றை உண்பதற்காக அருகே சென்றன. அப்போது, வேடன் விரித்திருந்த வலையில் அவை சிக்கிக் கொண்டன. இதைக் கண்ட வேடன் புறாக்களைப் பிடிப்பதற்காக ஓடி வந்தான். புறாக்கள் வேடனிடம் இருந்து தப்ப எண்ணின. எல்லாப் புறாக்களும் ஒற்றுமையாக வலையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றன. புறாக்கள் ஒற்றுமையாக இருந்ததால் அவை உயிர் தப்பின.

1. புறாக்கள் எதைத் தேடி அலைந்து திரிந்தன?

________________________________________

2. புறாக்கள் ஓரிடத்தில் என்ன பரவிக்கிடப்பதைக் கண்டன?

________________________________________

3. புறாக்கள் எதில் சிக்கிக்கொண்டன?

________________________________________

4. வேடன் ஏன் ஓடி வந்தான்?

________________________________________

5. புறாக்கள் உயிர் தப்பக் காரணம் என்ன?

________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

**அறிவித்தல்**

மாணவர்களே! உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

சுற்றுலா ஒன்று தமிழ்ப்பள்ளியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நான்காம் ஆண்டு மாணவர்கள் விலங்ககத்துக்குச் செல்ல உள்ளார்கள். பெற்றோரும் இதில் கலந்து கொள்ளலாம்.

**நாள்:** 04.02.2023 சனிக்கிழமை

**நேரம்:** 10:00 - 16:00

பெற்றோர்கள் மட்டும் நுழைவுச் சீட்டுக்கான பணத்தைக் கட்ட வேண்டும்.

- **தமிழ்ப்பள்ளி**

1. இது ஒரு மகிழ்ச்சியான அறிவித்தல். ( )
2. மாணவர்கள் பிறந்தநாள் விழாவுக்குச் செல்ல உள்ளார்கள். ( )
3. தமிழ்ப்பள்ளி இச்சுற்றுலாவைத் திட்டமிட்டுள்ளது. ( )
4. சுற்றுலாச் செல்லும் நாள் ஞாயிற்றுக்கிழமை. ( )
5. சுற்றுலாவில் பெற்றோரும் கலந்துகொள்ளலாம். ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |